மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.4/2022</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 17ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிவேல் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>17.09.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கின் 7ம் பிரதிவாதி ஒரு தமிழ்செல்வி, ஒரு பழனிச்சாமி என்பவரிடமிருந்து என்பவரிடமிருந்து தாவா சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி தமிழ்செல்வி என்பவரிடமிருந்து நானும், முருகேசன் என்பவரும் நல்லசாமி என்பவரும் கிரயம் வாங்கினோம் என்றால் சரிதான்.என்னுடன் கூட்டாக கிரயம் பெற்ற முருகேசன் என்பவர் தாவா சொத்தில் தனது பங்கை எனக்கும் நல்லசாமிஎன்பவருக்கும் கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நானும், நல்லசாமியும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்து கடந்த 03.10.2017 தேதியில் எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

2. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் எனக்கு பி அட்டவணை சொத்துக்களாக பிரிந்த சொத்துக்கள் தான் இந்த வழக்கில் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். தமிழ்ச்செல்வி பழனிச்சாமி என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற கிரைய ஆவணத்தில் பழைய காலை எண்கள் தான் குறிப்பிடப்பட்டிருந்தது. ரீசர்வே எண்கள் பொறுத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3. நானும், முருகேசன், நல்லசாமி ஆகியோர்கள் கிரயம் பெற்ற கிரைய ஆவணத்திலும் முருகேசன், எனக்கும் நல்லசாமிக்கும் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்திலும் நானும், நல்லசாமியும் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்திலும் புதிய ரீசர்வே எண்கள் குறிப்பிடப்பட்டு தான் மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் ரிசர்வே எண் 364/3L1A என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 346/1 என்று குறிப்பிடப்பட்டு விட்டது என்றால் சரிதான். அது தட்டச்சு பிழையினால் ஏற்பட்ட தவறுதான் என்றும் அதற்கு இந்த பிரதிவாதிகள் எந்த விதத்திலும் பொறுப்பு அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

4. மேற்படிப் பிழைகளை ரத்து செய்து கொடுக்கச் சொல்லி நான் பிரதிவாதிகளை அணுகி கேட்டதாகவும் பிரதிவாதிகள் அதற்கு மறுத்து விட்டதாகவும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆவணங்களில் ஏற்பட்ட தட்டச்சு பிழைகளுக்கு பிரதிவாதிகளுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கோர

இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடியாகதக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.17 18:15:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்